**பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையம்**

***100 வது மட்ட பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான***

***தொழினுட்ப ரீதியாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்***

(வீட்டிலிருந்து தோற்றும் திறந்த புத்தக தேர்வு – 2018 மாணவர் குழு)

**கே : விடைத்தாள்களை பதிவேற்றம் செய்யும்போது பின்பற்றவேண்டிய விதிமுறைகள் எவை?**

**விடை :**

- விடைத்தாள்கள் ஸ்கேன் செய்யப்பட்டு ஒரே PDF கோப்பாக பதிவேற்றப்படல் வேண்டும்.
- குறித்த PDF கோப்பின் அளவானது 5 MB (five megabytes) க்கு மேற்படாதவாறு) பதிவேற்றப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு வினாத்தாளிலும் விடையளிக்க வேண்டிய பக்கங்களின் எண்ணிக்கை தரப்பட்டிருப்பின் விடைத்தாள்கள் அப்பக்கங்களின் எண்ணிக்கைக்கு மேற்படலாகாது. விடைத்தாள்களை திருத்தும்போது மேலதிக பக்கங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. அதனால் விடைத்தள்களின் PDF கோப்பின் அளவு 5 MB (five megabytes) க்கு தயார்செய்தல் வேண்டும். இவ்வளவைப் பேணுவதற்காக ஒரு பக்கத்தில் 200-250 சொற்களை வரை எழுதுவதற்கு முயற்சித்தல் வேண்டும்.
- ஸ்கேன் செய்யப்பட்ட கோப்பு PDF ஆக மட்டுமே இருத்தல் வேண்டும். JPGs/ PNGs அல்லது வேட் (Word) கோப்புகள் (.doc, .docx) பதிவேற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
- கோப்பு பதிவேற்றப்பட்டதன் பின்னர் “Save Changes” எனும் தெரிவை கிளிக் செய்தல் வேண்டும். அல்லாவிடின் உங்கள் கோப்பு LMS அல் சேமிக்கப்படமாட்டாது.

**கேள்வி : எத்தனை மணிக்கு விடைத்தாள்களை பதிவேற்றம் செய்தல் வேண்டும்?**

பதில் : விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்யும்போது முடிவுத் திகதியின் கடைசித் தருணத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்கவும் சரியாக பதிவேற்றம் செய்யவும், **விடைகளை எழுதி முடித்தவுடனேயே பதிவேற்றம் செய்யப்படவேண்டிய நேரம் வரை காத்திருக்காது கூடிய விரைவில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.**

**கேள்வி : விடைத்தாள்களை எவ்வாறு ஸ்கேன் செய்தல் வேண்டும்?**

பதில் : பின்வரும் லிங்கினூடாக தெரிந்துகொள்ளலாம். https://youtu.be/5uu-S2qreA8

**கேள்வி : எந்தவிதமான ஸ்கேனிங் / ஸ்கேனிங் App பயன்படுத்தல் வேண்டும்?**

பதில் : தெளிவான ஒரு ஸ்கேனிங் / ஸ்கேனிங் App இனை உங்கள் கையடக்க தொலைபேசி மூலம் விடைத்தாள்களை ஸ்கேன் செய்யலாம்.

உதாரணம் : Adobe Scan, Cam Scanner, Google Drive Scanning feature

**கேள்வி : ஸ்கேன் செய்யப்பட்ட பக்கங்கள் தெளிவாக இல்லாவிடின் என்ன செய்யலாம்?**

பதில் : ஸ்கேன் செய்யப்பட்ட பக்கங்களின் தெளிவுத்தன்மை (contrast)/ வெளிச்சம் (brightness) மற்றும் கையெழுத்து தெளிவாக இல்லாதுவிடின் தொலைபேசியின் flasher இனை turn off செய்துவிட்டு ஸ்கேன் செய்யலாம். இருப்பினும் பக்கங்கள் கூடுதலாக கருமை நிறத்துடன் காணப்படின், மீண்டும் flasher இனை இயக்கிவிட்டு ஸ்கேன் செய்யவும்.

விடைத்தாள்களை படமாக (photos) எடுத்து PDF கோப்பினை உருவாக்குவதனை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு தயாரிக்கப்பட்ட PDF கோப்புகள் குறைந்த தரத்தைக்கொண்டவையாக இருக்கும்.

**கேள்வி : விடையளிப்பதற்கு கணிணி / தட்டச்சு (type write) உபயோகிக்கலாமா?**

பதில் : இல்லை. விடைகள் கண்டிப்பாக கையெழுத்தினால் எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

**கேள்வி : விடைத்தாள்கள் எப்பெயரில் பதிவேற்றப்படல் வேண்டும்?**

பதில் : கோப்பின் பெயர் பின்வருமாறு அமைதல் வேண்டும்.
Subject code_Username (FNDE101_aeba20189997)

**கேள்வி : CDCELMS ஆனது load ஆவதற்கு அதிக நேரமெடுப்பின் என்ன செய்யலாம்?**

பதில் : உமது இணைய இணைப்பு / சமிக்ஞை (signal) ல் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக அல்லது CDCELMS இன் நெருக்கடியான நேரங்களில் இவ்வாறு ஏற்படலாம்.
விடைத்தாள்களைப் பதிவேற்றும்போது ஏற்படும் இவ்வாறாக நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு கடைசி தருணம் வரைக் காத்திருக்காது விடைகளை எழுதி, ஸ்கேன் செய்து முடித்தவுடன் கூடிய விரைவில் பதிவேற்றம் செய்யப்படல் வேண்டும்.

**கேள்வி : விடைத்தாள்களை பதிவேற்றுவது கடினமாக இருக்கும்போது error message கிடைக்கப்பெற்றால்**

*பதில் :* ***Error message: file type cannot be accepted***
PDF கோப்புகளை மட்டுமே பதிவேற்றம் செய்யமுடியும்.

***Error message: The file is too large. The maximum size you can upload is 5MB***
உங்களது PDF கோப்பின் அளவானது 5MB க்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உங்கள் விடைத்தாள்களின் அளவு சரியாக இருந்தும் அளவானது 5MB க்கு மேற்படின் compression tool பயன்படுத்தி அளவினை குறைக்கலாம். (compress) (அண்ணளவாக எட்டு பக்கங்களின் அளவானது 5MB க்கு ஸ்கேன் செய்யலாம். பக்கங்களின் எண்ணிக்கை மேற்படின் compression tool பயன்படுத்தி 5MB க்கு அளவினை குறைக்கலாம் (compress). அத்துடன் கூடுதலாக மிக பக்கங்களுடன் compress செய்து பதிவேற்றும் போது அது விடைகளின் தெளிவுத் தன்மையினை பாதிக்கக்கூடும். அத்துடன் குறித்த பாடத்திற்கான வினாத்தாளில் தரப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொள்ளவும்.)

உதாரணம் : இந்த லிங்கினைப் பயன்படுத்தி கோப்பினை compress செய்யும் படிமுறைகளை அறியலாம். https://youtu.be/cyNOS2bqn1s

உங்களது விடைத்தாள்கள் தனிப்பட்டவை மற்றும் இரகசியமானவை ஆகும். அதனால் இணையதளத்தில் online compressors பயன்படுத்தி விடைத்தாள்களை compress செய்வதை தவிர்த்துக்கொள்ளவும். அத்துடன் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கமைய கோப்பின் பெயரை மாற்றியமைக்கவும்.

**கேள்வி : கோப்பினை பதிவேற்றும்போது *error massage* காட்டப்படினும் கோப்பானது பதிவேற்றப்பட்டுவிட்டது எனின் கோப்பு சரியாக பதிவேற்றப்பட்டதா என்பதை எவ்வாறு அறிவது?**

**பதில் : கையடக்க தொலைபேசி மூலம்** உங்களது கோப்பு பதிவேற்றப்பட்டால், அது ***PDF icon*** உடன் காட்டப்படும்.

**கணிணி அல்லது மடிக் கணிணி மூலம்** கோப்பு பதிவேற்றப்பட்டால், ஒரு ***PDF link*** காண்பிக்கப்படும்.

இவ்வாறு ***PDF icon / PDF link*** இல் கிளிக் செய்யும்போது அந்த கோப்பானது பதிவிறக்கப்படும். பின் அந்த கோப்பு (Open) திறக்கப்படுகிறதா / எழுத்துக்கள் வாசிக்கும் தன்மை கொண்டவையாக உள்ளதா மற்றும் பக்கங்கள் எண்ணிக்கை அனைத்தும் சரியாக உள்ளதா என பரீட்சித்து பார்க்கலாம்.